Nationale Krebsregistrierungsstelle
Organe national d’enregistrement du cancer
Servizio nazionale di registrazione dei tumori
National Agency for Cancer Registration

Kinderkrebsregister
Registre du cancer de l’enfant
Registro dei tumori pediatrici
Childhood Cancer Registry

# கட்டி கோளாறுகளைப் பதிவு செய்வது சம்பந்தமான தகவல்

## ஏன் கட்டிக் கோளாறுகள் சம்பந்தமான தகவல் சேகரிக்கப்படுகிறது?

கட்டிக் கோளாறுகள், அதாவது புற்றுநோய் மற்றும் அதன் முந்தைய நிலைகள் குறித்த தகவல் சேகரிப்பது முக்கியமானது. அவை இந்தக் கோளாறுகளுக்கான பரிசோதனைகள், சிகிச்சை மற்றும் பின்-தொடர்தல் ஆகியவற்றை மேம்படுத்துவதில் பங்காற்றுகின்றன. கட்டிக் கோளாறுகள் பற்றிய தகவலைப் பதிவு செய்வதைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமான ஒரு சட்டத்தை ஜனவரி 2020 முதல் சுவிஸ்லாந்து நடைமுறைப்படுத்தியுள்ளது. மருத்துவர் புற்றுநோய் பதிவகத்திற்கு உங்களது கோளாறு குறித்த ஒருசில தகவலை அனுப்ப வேண்டும் என்பதை இந்தச் சட்டம் வரையறுக்கிறது. ஒரு புற்றுநோய் பதிவகம் என்பது கட்டிக் கோளாறுகள் பற்றிய அனைத்து முக்கியமான தகவலும் உள்ளிடப்படும் ஒரு விரிதாளைப் போன்றதாகும்.

சுவிஸ்லாந்தில் பிரதேச அளவிலான புற்றுநோய் பதிவகங்கள் மற்றும் குழந்தைப்பருவ புற்றுநோய்ப் பதிவகங்கள் உள்ளன.
- 20 வயது அல்லது அதற்கு அதிகமான வயதுள்ள வயதுவந்தோரிடையே காணப்படும் கட்டிக் கோளாறுகள் குறித்த தகவல் பிரதேச புற்றுநோய்ப் பதிவகங்களில் சேகரிக்கப்படுகின்றன.
- குழந்தைப்பருவ புற்றுநோய்ப் பதிவகங்கள் குழந்தைகள் மற்றும் 20 வயதுக்கு உட்பட்ட வளரிளம் பருவத்தினரிடையே காணப்படும் கட்டிக் கோளாறுகள் சம்மந்தமான தகவலை சேகரிக்கிறது.

## சேகரிக்கப்பட்ட தகவலைக் கொண்டு என்ன செய்யப்படுகிறது?

சேகரிக்கப்பட்ட தகவல்கள் கட்டிக் கோளாறுகளுக்கு எதிரான போராட்டத்தில் உதவுகின்றன.

குழந்தைப்பருவ புற்றுநோய்ப் பதிவகம் மற்றும் தேசிய புற்றுநோய்ப் பதிவகம் சுவிஸ்லாந்து முழுவதும் சேகரிக்கப்பட்ட தகவல்களை மதிப்பாய்வு செய்கின்றன. உதாரணமாக, இது பின்வருவனவற்றை முடிவு செய்யப் பயன்படுத்தப்படலாம்:
- சுவிஸ்லாந்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் கட்டிக் கோளாறுகள் அடிக்கடி ஏற்படுகிறதா என்பதைப் பார்க்க,
- ஒருசில கட்டிக் கோளாறுகள் ஆண்டுகள் செல்லச்செல்ல அதிகரிக்கலாம் அல்லது குறையலாம்,
- ஒருசில மாற்றக் கோளாறுகளும் ஏற்படலாம்.

இந்த முடிவுகள் குறித்த தகவலை சுவிஸ்லாந்து மக்களுக்கு குழந்தைகள் புற்றுநோய் பதிவகமும் தேசிய புற்றுநோய் பதிவக அலுவலகமும் வழங்கும். மருத்துவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் உதவுவதுதான் கட்டிக் கோளாறுகள் பற்றி அதிகமாக தெரிந்துகொள்வார்கள். புற்றுநோயால் கஷ்டப்படும் மக்களுக்கு உதவுவதுதான் இதன் நோக்கமாகும். கட்டிக் கோளாறுகள் பற்றிய தகவலை சேகரிப்பது மற்றும் மதிப்பீடு செய்வது இந்த இலக்கை அடைவதற்கான மற்றுமொரு படியாகும். இந்தத் தகவல் பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிக்க உதவுகிறது:
- குணப்படுத்தும் வாய்ப்புகளை அதிகரிக்க புற்றுநோயை எவ்வாறு முன்கூட்டியே கண்டறிவது, அல்லது
- கட்டிக் கோளாறுகளுக்கு எப்படி மேம்பட்ட முறையில் சிகிச்சை அளிப்பது.

## புற்றுநோய்ப் பதிவகம் எந்த தகவலைக் கொண்டிருக்கும்?

அந்த நபரைப் பற்றி
- உங்களது பெயர் / உங்களது முகவரி / உங்களது பிறந்த திகதி / உங்களது பாலினம் / உங்களது காப்பீட்டு எண் (AVH எண்)

இந்த தகவல் உங்களது நோய்க்கான சரியான பதிவிற்கு தேவைப்படுகிறது. இந்த தகவல் அனுப்பப்படுவதற்கு முன்னால் அநாமதேயத் தகவலாக பெயரிலித்தன்மை (அதாவது அடையாளம் காண முடியாததாக) ஏனெனில் மதிப்பீட்டிற்கு அது அவசியமில்லை.

கட்டிக் கோளாறு பற்றி
- உங்களுக்கு என்ன மாதிரியான கட்டி உள்ளது,
- எப்போது மற்றும் எப்படி அந்த கட்டி கண்டறியப்பட்டது.

சிகிச்சையைப் பற்றி
- உங்களது கட்டிக் கோளாறுக்கு எவ்வாறு சிகிச்சை அளிக்கப்படுகிறது,
- சிகிச்சை துவங்கப்பட்ட திகதி.

**மார்பக, பெருங்குடல், அல்லது ப்ரோஸ்டேட் கட்டிகள் குறித்த கூடுதல் தகவல்**
- உங்களது குடும்பத்தில் புற்றுநோய் சம்பவங்கள் ஏற்பட்டுள்ளதா,
- அதே நேரத்தில் உங்களுக்கு ஏதாவது மற்ற பாதிப்புகள் உள்ளதா.

**குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினருக்கான (20 வயதுக்கும் குறைவானவர்கள்) கூடுதல் தகவல்**
- அதே நேரத்தில் குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினருக்கு ஏதாவது மற்ற பாதிப்புகள் உள்ளதா.
- சிகிச்சை அளிக்கப்பட்டதா, ஆம் என்றால் அவர்களுக்கு எப்போது எப்படித் தொடர்ந்து சிகிச்சை வழங்கப்படும்,
- சிகிச்சைகளுக்கு என்ன பலன்கள் கிடைத்துள்ளது (எ.கா. குணமடைதல்),
- கட்டிக் கோளாறுகளுக்குப் பிறகு எந்த பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன (எ.கா. கட்டிக் கோளாறுகள் மீண்டும் ஏற்பட்டுள்ளதா அல்லது சிகிச்சைக்கு எதிர்மறை விளைவுகள் ஏற்பட்டுள்ளதா என்பதை பரிசோதிக்க).

## இந்த தகவல் எப்படிப் பாதுகாக்கப்படுகிறது?

உங்களைப் பற்றிய தகவலைப் பெற, சேமித்து வைக்க மற்றும் செயல்முறைப்படுத்த புற்றுநோய்ப் பதிவகங்கள் கடுமையான விதிகளைப் பின்பற்றுகின்றன. இந்த கடுமையான விதிகள் புற்றுநோய் பதிவகச் சட்டத்தில் இடம்பெற்றுள்ளன. உதாரணமாக, இந்த தகவல் எப்படி சேமித்து வைக்கப்படுகிறது, யாரெல்லாம் இந்த தகவலைப் பயன்படுத்தலாம் மற்றும் இந்த தகவல் எப்போது நீக்கப்படும் என்பதை இது கட்டுப்படுத்துகிறது. மருத்துவக் காப்பீட்டு நிறுவனங்கள் அல்லது பணியாளர்களுக்கு இந்த தகவலுக்கான அணுகல் கிடைக்கப்பெறாது. தரவுப் பாதுகாப்பு சுவிஸ்லாந்துக்கு பொருந்தக்கூடிய நடைமுறைகள் மற்றும் சட்டங்களின்படி கட்டுப்படுத்தப்படுகிறது.

## புற்றுநோய்ப் பதிவகத்தில் நான் எனது தகவலைப் பார்க்க முடியுமா?

புற்றுநோய்ப் பதிவகத்தில் உங்களைப் பற்றி உள்ள அனைத்தையும் நீங்கள் பார்க்க முடியும். இதைப் பற்றிய நுண்ணறிவினைப் பெறுவதற்கு, இதன் நடைமுறை குறித்த தகவலுக்கு எழுத்துப்பூர்வமான கோரிக்கையுடன் ஒரு புற்றுநோய்ப் பதிவகத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்.

வயதுவந்தோரைப் பொறுத்தவரை, நீங்கள் வாழ்கின்ற பிரதேசத்தைச் சேர்ந்த புற்றுநோய்ப் பதிவகம் உங்களுக்கு தகவலை வழங்கும். உங்களது பிரதேசத்திற்கான புற்றுநோய்ப் பதிவகத்தின் முகவரியை நீங்கள் இணையத்தில் கண்டறியலாம் (முகவரிப் பட்டியல்): www.nkrs.ch/de/krebsregistrierung/krebsregister. தேசிய புற்றுநோய் பதிவகமும் உங்களுக்கு மின்னஞ்சல் மூலமாக nkrs@nicer.org அல்லது தொலைபேசி மூலமாக 044 634 53 74 உதவ முடியும்.

குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினரைப் பொறுத்தவரை, நீங்கள் குழந்தைப்பருவ புற்றுநோய்ப் பதிவகத்தை மின்னஞ்சல் மூலமாக kinderkrebsregister@ispm.unibe.ch அல்லது தொலைபேசி மூலமாக 031 631 56 70 தொடர்பு கொள்ளலாம்.

## காத்திருக்கும் காலம்

இந்த தகவல் கையேட்டினைப் பெற்ற பின் காத்திருக்கும் காலம் என்று குறிப்பிடப்படுவது துவங்கும். காத்திருக்கும் காலம் என்பது காத்திருக்க வேண்டிய காலமாகும், இது 3 மாதங்களுக்கு நீடிக்கும். இது உங்களது விவரங்கள் பதிவு செய்யப்படுவது குறித்து நீங்கள் சுயேட்சையாக முடிவு செய்ய உங்களுக்கு உதவுவதற்காக வழங்கப்படுகிறது.

## உங்களது விவரங்கள் பதிவு செய்யப்படுவதற்கு நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?

அவ்வாறென்றால், நீங்கள் எதுவும் செய்யத் தேவையில்லை.

## உங்களது விவரங்கள் பதிவு செய்யப்படுவதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?

உங்களது விவரங்கள் பதிவு செய்யப்பட வேண்டாம் என்றால், நீங்கள் ஒரு புற்றுநோய்ப் பதிவகத்திற்கு எழுத்துப்பூர்வமாக தகவல் தெரிவிக்க வேண்டும். நீங்கள் ஒரு படிவத்தைப் பயன்படுத்தலாம் அதனை உங்களது பிரதேச புற்றுநோய்ப் பதிவகம் அல்லது குழந்தைப்பருவ புற்றுநோய்ப் பதிவகத்தில் இருந்து நீங்கள் பெறலாம். நீங்கள் அதைப் பூர்த்தி செய்ய வேண்டும், கையொப்பமிட்டு, ஒரு புற்றுநோய்ப் பதிவகத்திற்கு திரும்பி அனுப்ப வேண்டும். அதன் பின்னர் நீங்கள் புற்றுநோய்ப் பதிவகத்தில் இருந்து எழுத்துப்பூர்வ உறுதிப்படுத்துதலைப் பெறுவீர்கள். அதன்பிறகு உங்களது தகவல் சேகரிக்கப்பட மாட்டாது.

காத்திருக்கும் காலத்தில் நீங்கள் எதிர்ப்பு தெரிவித்தால், உங்களது விவரங்கள் பதிவு செய்யப்பட மாட்டாது. நீங்கள் ஒரு பிந்தைய சமயத்தில்தான் எதிர்ப்பு தெரிவிக்கிறீர்கள் என்றால், அதாவது காத்திருக்கும் காலம் முடிவடைந்த பின்னர் புற்றுநோய்ப் பதிவகம் ஏற்கெனவே உங்களது விவரங்களைப் பதிவு செய்த பின்னர் தெரிவித்தால், ஒரு நபராக உங்களைப் பற்றி பதிவு செய்த அனைத்து தகவல்களையும் புற்றுநோய்ப் பதிவகம் உடனடியாக நீக்கிவிடும். உங்களது கோளாறு சம்பந்தமாக விவரங்கள் பதிவகத்தில் இருக்கும். எனினும், மீதமுள்ள தகவல் யாருக்கு சொந்தமானது என்று அந்த நபரைக் கண்டுபிடிக்க முடியாமல் போய்விடும். இந்த தருணத்திலிருந்து, இனி உங்களைப் பற்றி அல்லது உங்களது கோளாறு பற்றிய எந்த கூடுதல் விவரங்களும் பதிவுசெய்யப்பட மாட்டாது.

நீங்கள் எதிர்ப்பு தெரிவிப்பதால் உங்களது கட்டிக் கோளாறுக்கு சிகிச்சை அளிப்பதில் எந்தவிதமான தாக்கமும் ஏற்படாது. நீங்கள் எப்போது வேண்டுமானாலும் உங்களது மனதை மாற்றிக்கொண்டு உங்களது எதிர்ப்பினை விலக்கிக் கொள்ளலாம். கூடுதல் தகவலுக்கு தயவுசெய்து ஒரு புற்றுநோய் பதிவகத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்.

## கட்டிக் கோளாறுகளைப் பதிவு செய்வது குறித்து கூடுதலாக நான் எப்படித் தெரிந்து கொள்வது மேலும் எனக்கு கேள்விகள் இருந்தால் நான் யாரைத் தொடர்பு கொள்வது?

**கட்டிக் கோளாறுகளைப் பதிவு செய்வது குறித்த கூடுதல் தகவல்களை பின்வரும் இணையதளங்களில் காணலாம்**

- பிரதேச புற்றுநோய்ப் பதிவகங்களுடையது (முகவரிப் பட்டியல்): www.nkrs.ch/de/krebsregistrierung/krebsregister
- குழந்தைப்பருவ புற்றுநோய்ப் பதிவகத்தினுடையது: www.kinderkrebsregister.ch
- தேசிய புற்றுநோய்ப் பதிவகத்தினுடையது: www.nkrs.ch/de/krebsregistrierung

**இவற்றைப் பற்றிய கேள்விகள்**

- குழந்தைப்பருவ புற்றுநோய்ப் பதிவகம் (KiKR)
  மிட்டெல்ஸ்ட்ராஸ் 43, CH-3012 பெர்ன்
  மின்னஞ்சல் kinderkrebsregister@ispm.unibe.ch
  தொலைபேசி 031 631 56 70

**வயதுவந்தோரிடையே புற்றுநோய்க் கோளாறுகள் சம்பந்தமான கேள்விகள்**

- தேசிய புற்றுநோய்ப் பதிவகம் (NKRS)
  ஹெர்ஷென்கிராமென் 82, CH-8001 சூரிச்
  மின்னஞ்சல் nkrs@nicer.org
  தொலைபேசி 044 634 53 74

2020_02_V1

பின்வரும் இணையத்தில் இந்த நோயாளித் தகவல் மேலும் 13 மொழி வகைகளில் பதிவிறக்கக்கூடிய வகையில் கிடைக்கிறது: www.nkrs.ch/de/krebsregistrierung/patientinnen-und-patienten

311.613.ta